## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# கூட்டுறவு

கொள்கை விளக்கக் குறிப்பு

2022–2023

மானியக் கோரிக்கை எண் : 12


## இ. பெரியசாமி

கூட்டுறவுத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2022

# பொருளடக்கம்


| இயல் எண். | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1-2 |
| I | கூட்டுறவுக் கடன் அமைப்பு | 3-48 |
| II | வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 49-72 |
| III | நுகர்வோர் கூட்டுறவுகள் | 73-84 |
| IV | சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள் | 85-91 |
| V | பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு | 92-103 |
| VI | கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | 104-111 |
| VII | ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் | 112-118 |
| VIII | கூட்டுறவுத் தேர்தல் | 119-121 |
| | முடிவுரை | 122 |

# முன்னுரை

கூட்டுறவு இயக்கத்தினைப் பொருத்தவரை தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. இந்தியாவில் முதல் கூட்டுறவுச் சட்டமான கூட்டுறவு கடன் சங்கங்களின் சட்டம், 1904–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25–ஆம் நாள் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தியாவின் முதல் கூட்டுறவு கடன் சங்கம் திருவள்ளூர் மாவட்டம், திரூரில் 1904–ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 21–ஆம் நாள் தொடங்கப்பட்டது. ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் பணியிலும், மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மிக முக்கியப் பங்காற்றி வருகின்றன.

தமிழ்நாடு அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்பட்டு

வரும் கூட்டுறவுச் சங்கங்களை கீழ்க்கண்டவாறு ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

i) கூட்டுறவு கடன் சங்கங்கள்

ii) கூட்டுறவு வேளாண்மை உற்பத்தியாளர் விற்பனைச் சங்கங்கள்

iii) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

iv) சிறப்பு நோக்கத்திற்கான கூட்டுறவு சங்கங்கள்

v) கூட்டுறவு கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபடும் சங்கங்கள்.

இந்த கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் பற்றி பின்வரும் இயல்களில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.



# இயல் – I

## கூட்டுறவுக் கடன் அமைப்பு

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலம் முழுவதும் பரந்து விரிந்த கட்டமைப்புடன் செயல்பட்டு முறைசார்ந்த நிறுவன ரீதியான நிதிச் சேவைகளை வழங்கி வருகின்றன. மேலும், மாநிலம் முழுவதும் பரவியிருக்கும் கூட்டுறவுக் கட்டமைப்பிலுள்ள சங்கங்கள் மூலம் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களிடையே வங்கி சார்ந்த சேவைகளை வழங்குவதிலும், வளர்ச்சி பணிகளிலும் பெரும் பங்காற்றி வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் நியாயமான வட்டி விகிதத்தில் கிராமப்புற மக்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் அவர்கள் தமது கடன் தேவைக்கு முறைசாரா நிதி நிறுவனங்களிலிருந்தும், பிற தனிநபர்களிடமிருந்தும் அதிக வட்டிக்கு கடன் பெரும்


நிலை தவிர்க்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் பெரும்பான்மையான கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புறங்களில் செயல்பட்டு வருவதால், புவியியல் ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் விவசாயிகள் கடன் பெறுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த அமைப்பாக உள்ளன. இன்றளவும் ஊரகப் பகுதிகளில் கடன் வழங்குதலில் கூட்டுறவுக் கடன் அமைப்புகள் முக்கிய பங்காற்றுகிறது. அதே நேரத்தில், தங்களின் திறமையான கடன் வழங்கும் திட்டங்களினால் சமீபத்திய ஆண்டுகளில் நகர்ப்புறங்களிலும் வணிகத்தை அதிகரித்துள்ளன.

**1.2** நமது மாநிலத்தில், குறுகிய கால கூட்டுறவு கடன் அமைப்பு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களைக் கொண்டுள்ளது. நீண்ட கால கூட்டுறவு கடன் அமைப்பு, தமிழ்நாடு கூட்டுறவு மாநில



வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவை தவிர, நகர்ப்புற மக்களின் நலன் கருதி நகரக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன.

குறுகிய கால மற்றும் நீண்ட கால கூட்டுறவு கடன் கட்டமைப்புகள் குறுகிய கால மற்றும் நீண்ட கால கடன்களை விவசாயப் பணிகள் மற்றும் விவசாயம் சார்ந்த மூலதன உருவாக்கத்திற்காக வழங்குகின்றன. நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் நகர்ப்புற மக்களுக்கு முக்கியமாக விவசாயம் அல்லாத பணிகளுக்கு கடன்களை வழங்குகின்றன.





## 2. குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு

குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு என்பது கிராம அளவில் 4,451 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், மாவட்ட அளவில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும் உள்ளடக்கிய அமைப்பாகும். இவை கிராமப்புறங்களில் வேளாண் மற்றும் வேளாண் சாரா கடன்களை அதிகளவில் வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன.



தமிழ்நாட்டில் உள்ள 3 அடுக்கு கூட்டுறவு கடன் அமைப்பு, விவசாயிகள், கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோர், பெண்கள், சிறு வணிகர்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள் போன்ற பல்வேறு உறுப்பினர்களை உள்ளடக்கிய கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் கடன் தேவைகளை பூர்த்தி செய்கிறது. பரந்து விரிந்த கடன் கூட்டுறவுகள் அதிகளவிலான நிதி உள்ளடக்கத்தை (Financial inclusion) எய்துவதில் பெரும் பங்காற்றுகின்றன.




## 2.1 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கமானது ஒரு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் வசிக்கும் உறுப்பினர்களின் பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்யும் நிறுவன ரீதியான அமைப்பு ஆகும். அனைத்து தரப்பு மக்களும் எவ்வித பாகுபாடின்றி உறுப்பினராவதற்கு இச்சங்கங்கள் வழிவகை செய்கின்றன. ஒரு குறிப்பிட்ட சங்கத்தின் செயற்பாட்டுப்பகுதியில் வசிக்கும் மக்கள் அச்சங்கத்தின் உறுப்பினராவதற்கு தகுதியுடையவராவர். ஆதலால் பலதரப்பட்ட மக்களை ஒரு பொதுவான கட்டமைப்பின் கீழ் கொண்டு வந்து, இச்சங்கங்கள் கிராம அளவில், பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்காற்றுகின்றன.



**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பணிகள்:**




தமிழ்நாட்டில், 4,451 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் வேளாண் மற்றும் வேளாண் சாரா கடன்களை வழங்குவதே இச்சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். பயிர்க்கடன்கள் மற்றும் பண்ணை இயந்திரங்கள் வாங்குதல், நுண் நீர்ப்பாசனம், கறவை மாடுகள் வாங்குதல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளுக்காக வழங்கப்படும் கடன்கள் வேளாண்

கடன்களாகும். வீட்டுக்கடன், சுய உதவி குழுக்களின் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் இதர பண்ணை சாராக் கடன்கள் போன்றவை வேளாண்சாரா கடன்களாகும். இச்சங்கங்கள் விவசாய இடுபொருட்களான உரம், விதைகள் விற்பனையையும் மேற்கொண்டு வருகின்றன. மேலும், பண்ணை இயந்திரங்களை சொந்தமாக வாங்க வசதியற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விசை உழவு இயந்திரம் (பவர் டில்லர்), டிராக்டர் போன்ற வேளாண் உழவு இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு அளித்து வேளாண் இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், முதலீட்டு செலவினங்களையும் பெருமளவில் குறைக்கின்றன. இதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவதற்கு வழிவகை செய்கின்றன. இச்சங்கங்கள் அறுவடை இயந்திரங்கள், வைக்கோல் கட்டும் இயந்திரங்கள்



போன்ற பல இயந்திரங்களை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கி வருகின்றன. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் கிராமப்புற விவசாயிகளுக்கு கடன் வசதிகளை அளிப்பது மட்டுமின்றி, அவர்களின் நுகர்வுத் தேவைகளுக்காக நகை ஈட்டின்பேரில் கடன், மகளிர் சுயஉதவிக் குழுக்குளுக்கு கடன் போன்ற கடன் வசதிகளையும் வழங்கி வருகின்றன,

மேலும், இச்சங்கங்கள் பொது சேவை மையங்கள் மூலம், அரசு, குடிமக்களுக்கு வழங்கும் சேவைகளை வழங்கி வருகின்றன. குறிப்பாக, வருவாய்த்துறையின் சேவைகளான வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ஆதரவற்ற விதவை சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், நிலவுடமை ஆவணம் மற்றும் சமூக நலத்துறையின் சேவைகள் போன்றவற்றை மக்களுக்கு வழங்கி வருகின்றன. இவை தவிர, இந்த தொடக்க வேளாண்மைக்

கூட்டுறவு கடன் சங்கங்கள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் **23,814** முழு நேர நியாய விலைக்கடைகளையும், **9,360** பகுதி நேர நியாய விலைக்கடைகளையும், **16** நகரும் நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருவதன் மூலம் மிகப்பெரிய பொதுவிநியோகத்திட்ட கட்டமைப்பையும் உருவாக்கியுள்ளன.

கடந்த ஐந்தாண்டுகளில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் செயல்பாடுகள் பின்வருமாறு :

தொகை (ரூ.கோடியில்)

| ஆண்டு | வைப்புத் தொகை | கடன் வழங்கியது |
|---|---|---|
| 2017-18 | 6,606.17 | 17,784.88 |
| 2018-19 | 6,371. 79 | 19,723.89 |
| 2019-20 | 6,657.61 | 22,746.86 |
| 2020-21 | 7,131.35 | 28,276.17 |
| 2021-22 (28.02.2022 வரை) | 7,505.00 | 15,590.04 |



## 2.2 மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அமைந்த தொடக்கக் கூட்டுறவு சங்கங்களின் கூட்டமைப்பாகும். மாநிலத்தில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

இவ்வங்கிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை, வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் போன்ற அனைத்து இணைப்புச் சங்கங்களுக்கும் கடன் மற்றும் வங்கியியல் தொடர்பான சேவைகளை வழங்கி வருகின்றன.

இவ்வங்கிகள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகை, நபார்டு மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் மற்றும் மறுநிதி மூலம் நிதியாதாரங்களைப் பெறுகின்றன. இவ்வங்கிகள் மாநிலம் முழுவதும் **910**

கிளைகளுடன் செயல்பட்டு பொதுமக்களுக்கு நேரடியாக வங்கியியல் சேவைகளை வழங்கி வருகின்றன. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் (23) நடப்பாண்டில் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியியல் உரிமம் பெற்றுள்ளன. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் பின்வருமாறு

தொகை (ரூ.கோடியில்)

| ஆண்டு | உறுப்பினர்களின் பங்கு மூலதனம் | மாநில அரசின் பங்கு மூலதனம் | ஒதுக்கீடு மற்றும் உபரி | வைப்புகள் | பெறப்பட்ட கடன்கள் |
|---|---|---|---|---|---|
| 2017–18 | 1,308.93 | 68.32 | 3,480.12 | 27,693.41 | 4,885.59 |
| 2018–19 | 1,434.38 | 65.20 | 3,591.96 | 28,792.35 | 6,324.87 |
| 2019–20 | 1,489.00 | 70.04 | 3,724.30 | 30,316.00 | 8,478.87 |
| 2020–21 | 1,677.04 | 62.56 | 3,980.93 | 31,922.52 | 6,401.35 |
| 2021–22 (31.03.2022 வரை) | 1,824.70 | 62.56 | 4,089.02 | 35,786.11 | 11,676.94 |



தேசிய மற்றும் வணிக வங்கிகளுக்கு இணையாக மத்திய கூட்டுறவு வங்கிகள் வழங்கி வரும் நவீன வங்கியியல் சேவைகள் பின்வருமாறு :

- மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (CORE Banking Solution) நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.
- பணப்பரிமாற்ற வசதிகள் – நிகழ்நேர மொத்த தீர்வு மற்றும் தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (RTGS / NEFT).
- அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking service).
- குறுஞ்செய்தி வசதி (SMS Alert).
- 76 இடங்களில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM)

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு ரூபே பற்று அட்டைகளை (Rupay Debit Cards) வழங்கி வருகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கடன் பெறும் விவசாயிகள், பயிர்க்கடன் தொகையை தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம்

பெறுவதற்கு வசதியாக ரூபே வேளாண் கடன் அட்டைகள் (Rupay Kisan Credit Cards) வழங்கப்பட்டுள்ளது. மேலும், 'மைக்ரோ ஏடிஎம்' (Micro – ATMs) இயந்திரங்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வசிப்பிடத்திலேயே வங்கியியல் சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

## 2.3 தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமாக செயல்படுவதோடு மட்டுமல்லாமல், மாநிலத்தில் உள்ள கூட்டுறவு வங்கியியல் அமைப்பின் காப்பாளராகவும் உள்ளது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது, 1905–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இவ்வங்கியானது மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு கடனுதவி அளித்து வருகிறது.



இவ்வங்கி பொது மக்களிடமிருந்து பெறும் வைப்பு நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடம் பெறும் மறுநிதி உதவி மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்ற உயர் நிதி நிறுவனங்களிடம் பெறும் கடன் ஆகியவற்றின் மூலம் நிதியாதாரங்களைத் திரட்டி வருகிறது. இவ்வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவு வங்கிகளின் மிகை நிதியை கையாளுவதுடன் நிதி மேலாண்மை குறித்த வழிகாட்டுதலையும் அளிக்கிறது. மேலும், சென்னையில் 47 கிளைகள் மூலம் பொதுமக்களுக்கு நேரடி வங்கிச் சேவையும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்தின் மூலம் மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களின் பணித்திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

கடன் மதிப்பீடு, நிதி மேலாண்மை, வணிக வளர்ச்சி மற்றும் செயலற்ற சொத்து மேலாண்மை ஆகியவை குறித்து 2021-22-ஆம் ஆண்டில், 28.02.2022 வரை 4,171 பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து நிதிநிலையில் வலுவான நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளின் ஒப்பீடு விவரம் பின்வருமாறு:

தொகை (ரூ.கோடியில்)

| ஆண்டு | உறுப்பினர்களின் பங்கு மூலதனம் | மாநில அரசின் பங்கு மூலதனம் | ஒதுக்கீடு மற்றும் உபரி | வைப்புகள் | பெறப்பட்ட கடன்கள் | நிகர லாபம் |
|---|---|---|---|---|---|---|
| 2017-18 | 291.77 | 20.26 | 598.01 | 8,305.54 | 2,844.19 | 81.83 |
| 2018-19 | 308.23 | 20.26 | 608.11 | 8,384.60 | 3,222.90 | 81.87 |
| 2019-20 | 314.52 | 20.26 | 622.70 | 11,081.93 | 4,199.40 | 82.15 |
| 2020-21 | 363.56 | 20.26 | 960.77 | 10,679.41 | 9,567.30 | 147.78 |
| 2021-22 (31.03.22 வரை) | 530.10 | 20.26 | 1,027.09 | 12,708.28 | 13,569.33 | 229.50 |



தேசிய மற்றும் வணிக வங்கிகளுக்கு இணையான சேவைகளை வழங்கும் பொருட்டு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி பின்வருவனவற்றினை செயற்படுத்தியுள்ளது.

- மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (CORE Banking Solution)
- பணப்பரிமாற்ற வசதிகள் – நிகழ்நேர மொத்த தீர்வு (RTGS), தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (NEFT) மற்றும் உடனடி கட்டண சேவை வசதி (IMPS)
- இணைய வங்கியியல் (Internet Banking) சேவை
- அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking service)
- குறுஞ்செய்தி வசதி (SMS Alert)
- பெருநகர சென்னை மாநகராட்சியில் 19 இடங்களில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM)
- மைக்ரோ ATMs
- விரைவுத் தகவல் குறியீடு (QR code) வசதி

வாடிக்கையாளர்களுக்கு ரூபே பற்று அட்டைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அட்டைகளை இந்தியாவிலுள்ள எந்த ஒரு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்திலும் பயன்படுத்தலாம். நவீன வங்கியியல் தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழிகாட்டுவதில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி முக்கிய பங்காற்றி வருகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியினையும் (Primary Cooperative Development Fund), வைப்புத்தொகை உத்தரவாத நிதியினையும் (Deposit Guarantee Fund) பராமரித்து வருகிறது. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிதிப்பங்களிப்பிலிருந்து உருவாக்கப்பட்ட தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியானது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை



வலுப்படுத்தவும், இச்சங்கங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது. **31.03.2022** அன்றுள்ளபடி, தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியில் **ரூ.47.12** கோடி இருப்பு உள்ளது.

வைப்புத் தொகை உத்தரவாத நிதிக்கு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பங்களித்து வருகின்றன. இந்நிதியானது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகையினைத் திரும்ப வழங்க இயலாத நிலை ஏற்படும்போது, அவ்வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்நிதியானது கூட்டுறவு நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பகத் தன்மையையும், நன்மதிப்பினையும் தக்கவைக்க உதவிபுரிகிறது. **31.03.2022** தேதியில்

வைப்புத்தொகை உத்தரவாத நிதியில் ரூ.338.19 கோடி இருப்பு உள்ளது.

## 2.4 கூட்டுறவுக் கடன் சங்கங்களால் வழங்கப்படும் சேவைகள்

### (i) பயிர்க் கடன்

**"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து" – (குறள் 1032)**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் முக்கியமாக விவசாயிகளுக்கு எந்த பிணையமும் இல்லாமல் ரூ.1.60 லட்சம் வரையிலும், மற்றும் பிணையத்தின் பேரில் ரூ.3.00 லட்சம் வரையிலும் பயிர்க்கடன் வழங்குகின்றன. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எய்தும் வகையில், சிறு, குறு விவசாயிகள், பட்டியலின வகுப்பு / பட்டியலின பழங்குடியின விவசாயிகள் உட்பட புதிய உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டு



வருகிறது. பயிர்க்கடன் வழங்கும்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளுக்கு புறம்பாக, கடந்த சில ஆண்டுகளாக கடன் வழங்கப்பட்டதில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டதை தொடர்ந்து மாநிலத்தில் முதன்முறையாக பயிர்க்கடன் வழங்குவதற்கு விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டு நெறிமுறைகள் பயிர் சாகுபடி செய்யும் தகுதியுள்ள விவசாயிகள் கடன் பெறுவதை உறுதிசெய்வதோடு, பயிர்க்கடன் வழங்குதலில் ஒரே சீரான நடைமுறையை பின்பற்றுவதற்கும், பல்வேறு மாவட்டங்களில் வெவ்வேறான நடைமுறைகள் பின்பற்றப்படுவதையும் தடுக்கும்.

தமிழ்நாட்டில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள் 7% வட்டி விகிதத்தில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்குகின்றன. பயிர்க்கடனை உரிய கெடு தேதிக்குள் திரும்ப செலுத்தும் விவசாயிகளிடம் வட்டி

வசூலிக்கப்படுவதில்லை. அதாவது வட்டியில்லா பயிர்க்கடன் இவ்விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வட்டி இழப்பினை ஈடுகட்டும் வகையில், பயிர்க்கடனை உரிய கெடு தேதிக்குள் திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு, தமிழ்நாடு அரசு 4% வட்டி ஊக்கத்தொகையும், இந்திய அரசு 3% வட்டி ஊக்கத்தொகையும் அளிக்கிறது. பயிர்க்கடன் வழங்குவதற்கு இந்திய அரசிடமிருந்து பெறும் வட்டி மானியம் அல்லாமல் தமிழ்நாடு அரசு, சொந்த நிதியிலிருந்து பயிர்க்கடன் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு 2% வட்டி மானியத்தை வழங்கி வருகிறது.

விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்குவதில் கூட்டுறவுகள் நடப்பாண்டில் ரூ.10,000 கோடி எனும் மைல்கல்லை எட்டியுள்ளது. **31.03.2022** வரை, **14,84,052** விவசாயிகளுக்கு **ரூ.10,292** கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், **1,45,109**



பட்டியலின வகுப்பு / பட்டியலின பழங்குடியின விவசாயிகளுக்கு **ரூ.834.77** கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், **11,82,198** சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு **ரூ.7,871.33** கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து விவசாயிகளும் கடன் பெறும் வகையிலும், அவர்கள் பயிர்செய்யும் பரப்பளவை அதிகரிக்கும் வகையிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் **5,67,874** புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அதில் **2,80,544** விவசாயிகளுக்கு **ரூ.1,730.81** கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(ii) டெல்டா மாவட்டங்களில் பயிர்க்கடன் வழங்குதல்**

டெல்டா மாவட்டங்களில் பயிர்சாகுபடி செய்த 2,70,398 விவசாயிகளுக்கு 31.03.2022 வரை வழங்கப்பட்ட பயிர்க்கடன் ரூ.1,280.54 கோடியை விட மிக அதிகமாகும்.

**(iii) உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்பான இதர பணிகளுக்கு கடன் வழங்குதல்**

கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்பான இதர பணிகளை செய்யும் விவசாயிகளுக்கு அவர்களின் நடைமுறை மூலதன தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்பான இதர பணிகளுக்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுவதை உறுதி செய்கிறது. 31.03.2022 வரை 44,531 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் அதன் தொடர்புடைய பணிகளுக்காக **ரூ.218.09** கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. தமது வாழ்வாதாரத்திற்கு கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த தொழில்களை சார்ந்திருக்கும் மக்களுக்கு இக்கடன் வசதி பேருதவியாக இருக்கும்.



**(iv) கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கான கடன்கள்**

கூட்டுப்பொறுப்புக் குழுக்கள், அமைப்பு ரீதியிலான நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற இயலாதிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகள், வாரத்துக்கு பயிர்செய்வோர், குத்தகைக்குப் பயிரிடுவோர், வாய்மொழி குத்தகைதாரர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும். இதன்மூலம் சொந்த நிலமில்லாத, அதே சமயம் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளும் வட்டியில்லாப் பயிர்க்கடன்கள் பெறும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**2021–22–ஆம் ஆண்டில் 28.02.2022** வரை, **11,746** கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு **ரூ.338.41** கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### (v) வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்திலும், வேளாண்மையில் மூலதன உருவாக்கத்தை மேம்படுத்துவதற்கும், நிலையான நீடித்த வேளாண் உற்பத்தியை உறுதி செய்யும் வகையிலும், கூட்டுறவு நிறுவனங்கள் நுண்ணீர்ப் பாசனம், நில மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் பண்ணை இயந்திரமயமாக்குதல் போன்ற முதலீட்டு நோக்கங்களுக்கு கடன் வழங்க தொடர்ந்து ஊக்குவிக்கப்படுகின்றன.

2021–22–ஆம் ஆண்டில் 28.02.2022 வரை, 13,110 விவசாயிகளுக்கு ரூ.97.98 கோடி முதலீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### (vi) தானிய ஈட்டுக் கடன்

விவசாயிகளின் விளைபொருட்களை கிடங்குகளில் இருப்பு வைத்து அதற்கு ஈடாக தானிய



ஈட்டுக் கடன் வழங்குவதனால், அறுவடைக்காலங்களில் விளை பொருட்களின் விலை குறைவாக உள்ளபோது விவசாயிகள் தமது தானியங்களை இருப்பு வைத்து இலாபகரமான விலை கிடைக்கும்போது அவற்றை விற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கிறது. உச்ச அறுவடைக்காலங்களில் உற்பத்தி அதிகமாக இருக்கும்போது விவசாயிகள் உடனடி பணத் தேவைக்காக தமது விளைபொருட்களை குறைந்த விலையில் விற்பதை தடுப்பதற்கு தானிய ஈட்டுக் கடன் வசதி உதவியாக உள்ளது.

2021–22 –ஆம் ஆண்டில் 28.02.2022 வரை, 6,293 பயனாளிகளுக்கு ரூ.219.09 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### (vii) சுய உதவிக் குழுக்களுக்கு நிதி உதவி

கூட்டுறவு கடன் நிறுவனங்கள் சுய உதவிக் குழுக்களுக்கு தொடர்ந்து கடன் வழங்கி அவர்களின்

கடன் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. நிறுவனம் சார்ந்த கடனுதவிகள் மகளிருக்கு கிடைக்கப்பெறுவது பாலினப் பாகுபாட்டை குறைப்பதுடன் மகளிர் சுதந்திரத்தை ஊக்கப்படுத்துகிறது. 2021–22–ஆம் ஆண்டில் 28.02.2022 வரை, 16,955 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.580.92 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பாக கடனை திருப்பிச் செலுத்தும் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் திறனை கருத்திற் கொண்டு, 2021–ஆம் ஆண்டு முதல் மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு வழங்கப்படும் கடன் தொகை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**(viii) மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்**

கூட்டுறவு நிறுவனங்கள், மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி



அவர்களின் பொருளாதாரம் மற்றும் வருமானத்தை பெருக்கும் வகையிலான நடவடிக்கைகளுக்கு கடன்கள் வழங்கி வருகின்றன. உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தும் கடன்தாரரிடமிருந்து வட்டி வசூலிக்கப்படுவதில்லை. **2021–22** ஆம் ஆண்டில் **28.02.2022** வரை, **6,349** மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.**29.77** கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(ix) சிறு வணிகர்களுக்கான சிறுவணிகக் கடன்**

சிறுவணிகர்கள், தனியாரிடம் அதிக வட்டியில் கடன் பெறுவதை தவிர்த்து, அவர்களை முறையான வங்கி அமைப்பு முறையின் கீழ் கொண்டு வரும் வகையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், பூ, காய்கறிகள் மற்றும் பழங்கள் வியாபாரம் செய்தல், பெட்டிக் கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்கள், தள்ளுவண்டியில் பழங்கள், காய்கறிகள் விற்பவர்கள் போன்றோருக்கு

குறைந்த வட்டியில் கடன் வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், குழு அமைத்து கடன்கள் வழங்குவது ஊக்குவிக்கப்படுகிறது. இதன்படி கடன் பெறும் சிறுவணிகர்கள் ஒருவருக்கொருவர் பிணையதாரராகவும், பெற்ற கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்கின்றனர்.

**2021–22 ஆம் ஆண்டில் 28.02.2022** வரை, **66,168** நபர்களுக்கு ரூ.**218.10** கோடி சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### (x) கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்குதல்

தமது கடன் தேவைகளுக்கு கந்துவட்டிகாரர்களிடம் கடன் பெறும் நிலையிலிருந்து கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் கடன் தேவைகளை பூர்த்தி செய்யும் சிறப்புத் திட்டம் இந்த அரசால் 2021–22–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



2021–22–ஆம் ஆண்டில் 11.03.2022 வரை, 2,436 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ரூ.4.36 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வருங்காலங்களில் மகளிரின் முன்னேற்றத்தை மேம்படுத்துவதாக அமையும்.

### (xi) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், மகளிர் தொழில் முனைவோருக்கு சிறு தொழில் தொடங்க ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்கி வருகின்றன. மகளிரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் 2021–22ஆம் ஆண்டில் 28.02.2022 வரை, 6,500 மகளிர் தொழில் முனைவோர்களுக்கு ரூ.34.32 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(xii) பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்**

மாத சம்பளம் பெறும் பணிபுரியும் மகளிருக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் நுகர்வோர் கடன் வழங்கி வருகின்றன. 2021–22 ஆம் ஆண்டில் 28.02.2022 வரை, 2,061 பணிபுரியும் மகளிருக்கு ரூ.**45.63** கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(xiii) பயிர்க் காப்பீடு**

விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களுக்கு எதிர்பாராத நிகழ்வுகளால் சேதம் ஏற்படும் போது இழப்பீட்டுத் தொகை வழங்கி, விவசாயிகளின் நிலையான வருமானத்திற்கு வழிவகை செய்யும் வகையில் மாநிலத்தில் பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டுத் திட்டம் (PMFBY) 2016–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் காரீஃப் 2020 பருவம் முதல் திருத்தப்பட்ட பிரதம மந்திரி



பயிர்க்காப்பீடு திட்டமாக சில திருத்தங்களுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

2021–22–ஆம் ஆண்டில் 28.02.2022 வரை, 3,25,265 விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக சேர்க்கப்பட்டு, ரூ.32.21 கோடி காப்பீட்டுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. 2016–17–ஆம் ஆண்டு முதல் 28.02.2022 வரை பயிர்க்காப்பீடு செய்த 28,47,800 விவசாயிகளுக்கு ரூ.6,047.63 கோடி மகசூல் இழப்புக்கான இழப்பீட்டுத் தொகை கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**(xiv) பொதுச் சேவை மையங்கள்**

பொதுச் சேவை மையங்கள் அரசின் சேவைகளை துரிதமாகவும் எளிமையாகவும் பொது மக்களுக்கு, குறிப்பாக தொலை தூரங்களிலுள்ள கிராமப்புற மக்களுக்கு வழங்குவதை முக்கிய

நோக்கமாக கொண்டு தமிழகமெங்கும் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன. அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில், குறித்த காலத்தில் வழங்கப்படுவதால் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான சேவைகளை பெறுவதற்கு பல்வேறு அரசு அலுவலகங்களை நாடி செல்வதால் ஏற்படும் கால விரயமும், பொருட் செலவும் பெருமளவு குறைக்கப்படுகிறது. தற்போது, 4,412 பொதுச் சேவை மையங்கள் தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 450 நகர்ப் பகுதிகளிலும், 3962 கிராமப்புறங்களிலும் செயல்படுகின்றன. பொதுமக்களுக்கு இ–சேவை, இ–டிஸ்டிரிக்ட் மற்றும் டிஜி சேவா போர்ட்டல்கள் மூலம் தற்போது 186 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இம்மையங்களின் மூலம் வருவாய்த்துறையின் சேவைகளான வருமானச்



சான்றிதழ், சாதிச் சான்றிதழ், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், நிலவுடமை ஆவணம் மற்றும் சமூக நலத்துறையின் சேவைகள், மேலும் பதிவுத்துறையின் சேவைகளான வில்லங்க சான்றிதழ் மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல் முதலான சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

2021–2022 (28.02.2022 வரை)–ஆம் ஆண்டில் பொது சேவை மையங்களில் 41,15,454 சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு, இதன் மூலம் ரூ.14.49 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

### 3. நீண்டகால கூட்டுறவுக் கடன் அமைப்பு

நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும், வட்ட / வட்டார அளவில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியதாகும்.

## 3.1 தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

31.03.2022 அன்றுள்ளபடி, வங்கியின் பங்கு மூலதனம் ரூ.51.55 கோடி ஆகும். மேலும், ரூ.203.12 கோடி அளவிற்கு வைப்புகள் சேகரிக்கப்பட்டுள்ளது. 2021-22-ஆம் ஆண்டில் 31.03.2022 வரை, இவ்வங்கி ரூ.291.88 கோடி நகைக்கடன் வழங்கியுள்ளது.

## 3.2. தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

மாநிலத்தில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், தங்களிடம் உள்ள சொந்த நிதியிலிருந்தும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து நிதியுதவி பெற்றும் நகைக்கடன்களை வழங்கி வருகின்றன. இவ்வங்கிகளால் **2021-22-**ஆம் ஆண்டில்



**28.02.2022** வரை, ரூ.609.64 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 4. நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு

மாநிலத்தில் நகர கூட்டுறவு கடன் அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகளின் இணையத்தையும், நகர மற்றும் புறநகர் பகுதிகளில் செயல்படும் **128** கூட்டுறவு நகர வங்கிகள் மற்றும் 116 நகர கூட்டுறவு கடன் சங்கங்களையும் உள்ளடக்கியதாகும்.

## 4.1. தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம்

மாநிலத்தில் நகர கூட்டுறவுக் கடன் இயக்கத்தின் வளர்ச்சியினை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகவும், நகர்ப்புற மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்யும் பணியில் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழிகாட்டியாகவும், தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகளின் இணையம் செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு நகர கூட்டுறவு

வங்கிகளின் இணையம் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிர்வாகம், பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் வங்கிகள் நவீன வங்கியியல் தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றில் உதவி புரிந்து வருகிறது. தமிழ்நாடு மாநில நகர கூட்டுறவு வங்கிகளின் இணையம், அனைத்து நகர கூட்டுறவு வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி செயல்படுவதை வழிநடத்தும் அமைப்பாக திகழ்கிறது. இந்த இணையமானது, நகர கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் தீர்வு முறை நடைமுறைப்படுத்துவதை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தி வருகிறது.

நகர கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பங்களிப்பாக பெறப்படும் தொகையை கொண்டு நகர கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சி நிதி ஏற்படுத்தப்பட்டு, இந்நிதியை இணையம் பராமரித்து வருகிறது. இந்நிதியின் மூலம்



நலிவுற்ற நகர கூட்டுறவு வங்கிகள், போதுமான நிதி மூலதனத்தை பேணுவதற்கு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம் உதவுகிறது.

### 4.2. நகரக் கூட்டுறவு வங்கிகள்

நகரக் கூட்டுறவு வங்கிகள், நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச் சேவைகள் மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. மாநிலத்தில் தற்போது 128 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், பொது மக்களிடமிருந்து வைப்புகளை பெற்று, வீடு கட்டுதல், வணிகம் மற்றும் உறுப்பினர்களின் அவசர மற்றும் சொந்த தேவைகளுக்காக நகைக் கடன் உள்ளிட்ட இதர பண்ணைசாராக் காரியங்களுக்காக கடன் வசதிகளை அளித்து வருகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கியியல் சேவையினை அளிப்பதற்காக நகரக் கூட்டுறவு

வங்கிகளில் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

28.02.2022 அன்றுள்ளபடி நகரக் கூட்டுறவு வங்கிகளின் வைப்புத் தொகை ரூ.8,492.32 கோடியாக உள்ளது. இவ்வங்கிகளால் 2021–22–ஆம் ஆண்டில், 28.02.2022 வரை, 4,90,016 உறுப்பினர்களுக்கு ரூ.4,569.83 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இக்கடன், 14,489 சிறு வணிகர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.36.33 கோடியையும் உள்ளடக்கியதாகும். இதன் மூலம், அதிக வட்டியில் கடன் வழங்கும் தனியாரிடமிருந்து சிறுவணிகர்கள் கடன் பெறுவது தடுக்கப்படுகிறது.

## 4.3. நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

தமிழ்நாட்டில், துரிதமான நகரமயமாக்கலால், நகர்ப்புறங்களில் செயல்பட்டு வந்த சில தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வேளாண்



சார்ந்த கடன்களின் மூலம் பெறப்படும் வருவாய் குறைவை எதிர்கொள்வதால், நகர கூட்டுறவு கடன் சங்கங்களாக மாற்றம் செய்யப்பட்டு தொடர்ந்து அப்பகுதியில் வசிக்கும் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கி வருகின்றன. நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் 116 நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள், பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக் கடன், வணிகக் கடன் மற்றும் இதர பண்ணைசாராக் கடன்களை வழங்கி வருகின்றன.

28.02.2022 அன்றுள்ளபடி நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வைப்புத் தொகை ரூ.1,578.93 கோடியாக உள்ளது. இச்சங்கங்களால், 2021–22–ஆம் ஆண்டில் 28.02.2022 வரை, 1,31,315 உறுப்பினர்களுக்கு ரூ.1,010.21 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகரக் கூட்டுறவுச்

சங்கங்களால் நகர்புறத்திலுள்ள சிறு வணிகர்களுக்கு ரூ.3.55 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**5. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்**

பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் மாநில மற்றும் மத்திய அரசு பணியாளர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்களின் கடன் தேவைகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்வதில் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் 1,711 பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் தங்களது உறுப்பினர்களுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் கடன்களை வழங்குகின்றன. இச்சங்கங்களில் 28.02.2022 அன்றுள்ளபடி ரூ.1,886.85 கோடி உறுப்பினர்களின் பங்கு மூலதனமும், ரூ.17,835.88 கோடி நடைமுறை மூலதனமும் உள்ளன. இச்சங்கங்கள் நடப்பு 2021–22–ஆம் ஆண்டில் ரூ.7,487.30 கோடி



அளவிற்கு 3,31,349 உறுப்பினர்களுக்கு 28.02.2022 வரை கடன்கள் வழங்கியுள்ளன.

**6. கடன் தள்ளுபடி திட்டங்கள்**

**6.1 பயிர்க்கடன் தள்ளுபடி 2021**

தமிழ்நாடு அரசால் கூட்டுறவு நிறுவனங்களில் 31.01.2021 அன்று நிலுவையிலிருந்த ரூ.12,110.74 கோடி பயிர்க்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டது.

பயிர்க்கடன் தள்ளுபடி 2021 திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, இவ்வாண்டில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு)–க்கு மறுநிதியுதவிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.4,250.20 கோடியும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிலுவையிலுள்ள தள்ளுபடித்தொகை மீதான வட்டியாக ரூ.553.75 கோடியும் அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 6.2 பொது நகைக் கடன் தள்ளுபடி 2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் 13.09.2021 அன்று, 5 சவரனுக்குட்பட்டு பெறப்பட்ட பொது நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தார். இதனை அடுத்து கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு குடும்பத்தில் 31.03.2021–ஆம் நாள் வரை 5 பவுனுக்கு உட்பட்டு (மொத்த எடை 40 கிராமுக்கு உட்பட்டு) பொது நகைக் கடன் பெற்று அதில் சில கடன்தாரர்கள் நாளது தேதிவரை தங்களது நிலுவைத் தொகையினை பகுதியாக / முழுவதுமாக செலுத்தியது நீங்கலாகவும், தகுதி பெறாத நேர்வுகளை நீக்கிய பின்னரும் அரசாணை பிறப்பிக்கப்படும் நாள் வரை அதாவது 01.11.2021 வரை நிலுவையில் உள்ள ரூ.6,000 கோடி (தோராயமாக) நகைக் கடன்களை தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது. அரசு,



பொதுநகைக்கடன் தள்ளுபடிக்கென 2021–22 ஆம் ஆண்டிற்கு ரூ.1,215.58 கோடி வழங்கியுள்ளது.

## 6.3 சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி

மாண்புமிகு நிதியமைச்சர், கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட 31.03.2021 அன்றைய தேதியில் நிலுவையிலிருந்த ரூ.2,674.64 கோடி மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தார். இத்தள்ளுபடி திட்டம், கோவிட்–19 பெருந்தொற்றால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு கடனை திருப்பி செலுத்த இயலாத 1,17,617 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பயனளிக்கும். மொத்த தள்ளுபடி தொகையில், முதல் தவணையாக ரூ.600 கோடியினை 2021–22–இல் அரசு கூட்டுறவுகளுக்கு விடுவித்துள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு, அரசு ரூ.20,785.38 கோடி கடன்களை தள்ளுபடி செய்துள்ளது. இது பயிர்க்கடன் தள்ளுபடி தொகை ரூ.12,110.74 கோடி, பொது நகைக்கடன் தள்ளுபடி தொகை ரூ.6000 கோடி (தோராயமாக) மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுக் கடன்

தள்ளுபடி தொகை ரூ.2,674.64 கோடியையும் உள்ளடக்கியதாகும். இவ்வாறு மூன்று தள்ளுபடி திட்டங்களை செயல்படுத்திய போதிலும், கூட்டுறவு நிறுவனங்கள் வைப்பு சேகரிப்பு மற்றும் நிதி திரட்டல் மூலம் உறுப்பினர்களுக்கு பல்வேறு வகையான கடன்களை வழங்கி வருகின்றன.



## இயல் – II

## வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

மாநிலத்திலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், உறுப்பினர்கள் விளைவிக்கும் வேளாண் விளைப்பொருட்களை நியாயமான விலைக்கு சந்தைப்படுத்திட ஏற்பாடு செய்தல், விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை விநியோகித்தல், விளைப்பொருட்களின் மீது தானிய ஈட்டுக் கடன் வழங்குதல், வேளாண் விளைப்பொருட்களைப் பதப்படுத்தி மதிப்புக் கூட்டும் பணியினை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. அறுவடைக் காலங்களில் விவசாயிகளின் அவசரத் தேவைகளுக்காக வேளாண் விளைப் பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதை தவிர்ப்பதை இச்சங்கங்கள் உறுதி செய்வதுடன்

விவசாயிகளின் கடன் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன.

## 2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED)

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 20.02.1959 முதல் தனது வியாபாரத்தை துவங்கியது. இணையத்தின் செயல் எல்லை தமிழ்நாடு முழுவதும் ஆகும். தற்போது 18 மண்டல அலுவலங்களுடன் செயல்பட்டு வருகிறது. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் உரம் மற்றும் இதர வேளாண் இடுபொருட்களை விநியோகம் செய்வது தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் முக்கிய பணியாகும்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகிலுள்ள பாமணியில் கலப்பு உர அலகு 1970–ஆம் ஆண்டு நிறுவப்பட்டு குருணை வடிவிலான கலப்பு உரங்கள்



தயாரிக்கப்பட்டு "பாமணி" என்ற பெயரில் சந்தைப்படுத்தப்படுகிறது. நாள் ஒன்றுக்கு சராசரியாக 150 மெ.டன் கலப்பு உரம் தயாரிக்கப்படுகிறது. மதுரை, வேலூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமான கலப்பு உர அலகுகள் உள்ளன. இவை தவிர 36,140 மெ.டன் கொள்ளளவு கொண்ட 45 கிடங்குகளும், சென்னையில் 3,460 மெ.டன் கொள்ளளவு கொண்ட 2 குளிர்ப்பதன கிடங்கு வசதிகளும் உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராக செயல்பட்டு, தமிழ்நாட்டில் விலை ஆதரவு திட்டத்தினை செயல்படுத்துகிறது. இந்திய எண்ணெய் கழகத்துடன் இணைந்து இவ்விணையம் 8 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

உர விற்பனையில் கூட்டுறவின் பங்கினை தற்போதுள்ள 20 சதவீதத்திலிருந்து அதிகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உயிரி உரங்கள், உயிரி பூச்சிக்கொல்லிகள், நுண்ணூட்டச்சத்து கலவைகள், வேப்பம்பிண்ணாக்கு மற்றும் வேப்பம்தூள் ஆகியவற்றை உற்பத்தி செய்ய இணையம் உத்தேசித்துள்ளது. மேலும், மண்புழு தொழுஉரம், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிடமிருந்தும் திடக்கழிவு உரம் பெரு நகர சென்னை மாநகராட்சியிடமிருந்தும் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வருகிறது.

உரக்கொள்முதலுக்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு 2020-21-ஆம் ஆண்டிற்கு வட்டியில்லா கடனாக ரூ.130.00 கோடி அரசு வழங்கியுள்ளது. 2020-21 ஆம் ஆண்டில், இணையத்தின் புரள் வணிகம் ரூ.809.23 கோடி ஆகும்.



2021-22 (31.03.2022 வரை)-ஆம் ஆண்டிற்கு இணையத்தின் புரள் வணிகம் ரூ.967.10 கோடி ஆகும்.

மேலும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தேர்ந்தெடுக்கப்பட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடன் இணைந்து கூட்டு முயற்சி மூலம் சில வேளாண் விளைப்பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. உடுமலைப்பேட்டை மற்றும் தாராபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலிருந்து பச்சை பயறு, உடுமலைப்பேட்டை மற்றும் சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலிருந்து கொள்ளு, பவானி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திலிருந்து மசூர் பருப்பு, பழனி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை

சங்கத்திடமிருந்து கருப்பு உளுந்து, திருமயம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திடமிருந்து கருப்பு கவுனி, போளூர் மற்றும் செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களிலிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. நாளது தேதிவரை ரூ.56.43 இலட்சம் மதிப்பிலான வேளாண் விளைப்பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

### 3. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF)

டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் செயல்படும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல இணையமாக தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் செயல்படுகிறது. உரங்கள் மற்றும் வேளாண் உபகரணங்கள் விநியோகிப்பதுடன் உறுப்பினர்களுக்கு நகைக்கடனும் வழங்கி வருகிறது.



இவ்விணையத்திற்கு 6,600 மெ.டன் கொள்ளளவு கொண்ட 11 கிடங்குகள் சொந்தமாக உள்ளது. 2020–21–ஆம் ஆண்டில் இணையத்தின் மொத்த புரள் வணிகம் ரூ.93.23 கோடி ஆகும். 2021–22–ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) இணையத்தின் புரள் வணிகம் ரூ.104.90 கோடி ஆகும்.

### 4. நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் (NCMS)

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1935 இல் துவக்கப்பட்டு, நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியை செயல் எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கம், விவசாயிகள் மற்றும் மலைவாழ் பழங்குடியினரின் விளைபொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்வதோடு, வேளாண் இடுபொருட்களை விநியோகிப்பதையும் தனது முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் உதகமண்டலத்திலுள்ள தலைமை அலுவலகத்துடன், 17 சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை மேற்கொண்டு வருகிறது.

விவசாயிகளால் விளைவிக்கப்படும் உருளைக் கிழங்கு, மலைக்காய்கறிகள் மற்றும் பூண்டு ஆகியவை மேட்டுப்பாளையத்திலுள்ள ஏல விற்பனைக் களத்தில் தினசரி ஏலம் மூலம் சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் உதகமண்டலம் நகராட்சி சந்தையில் காய்கறி ஏல மையம் செயல்பட்டு வருகிறது. சமையல் எரிவாயு விநியோகம் செய்வதற்காக இச்சங்கம் இந்திய எண்ணெய் கழகத்தின் விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்திற்கு உதகமண்டலம் மற்றும் கோத்தகிரியில் 2 திருமண மண்டபங்கள் சொந்தமாக உள்ளன. மேலும், வேளாண் இடுபொருட்கள் மற்றும்



வேளாண் விளைபொருட்களை சேமித்து வைக்க 14,575 மெ.டன் மொத்த கொள்ளளவு கொண்ட 16 கிடங்குகள் சொந்தமாக உள்ளன.

மேலும், இச்சங்கத்திற்கு கலப்பு உரம் உற்பத்தி அலகு ஒன்றும் மேட்டுப்பாளையத்தில் உள்ளது. இது நீலகிரி மாவட்டத்தில் விளையும் பயிர்களுக்கு ஏற்ற இரசாயன உரங்களை உற்பத்தி செய்கிறது. மலைவாழ் மக்களின் ஒட்டுமொத்த நலனுக்காக இச்சங்கம் பங்காற்றி வருகிறது.

2020–21 ஆம் ஆண்டில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மொத்த புரள் வணிகம் ரூ.98.62 கோடி ஆகும். 2021–22–ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) சங்கத்தின் புரள் வணிகம் ரூ.78.91 கோடி ஆகும்.

## 5. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு வேளாண் விளைபொருட்கள், உர விற்பனை மற்றும் இதர வேளாண் இடுபொருட்கள் விற்பனை செய்வதை முதன்மை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகின்றன. விவசாய உறுப்பினர்கள் தங்களது வேளாண் விளைபொருட்களை இலாபகரமான விலைக்கு விற்பனை செய்ய ஏதுவாக இச்சங்கங்கள் ஏலகளம், உலர்களம் மற்றும் கிடங்குகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி வருகின்றன.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசிய பொருட்களை விநியோகம் செய்திட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நியாய விலைக்கடைகளையும் நடத்துகின்றன. பெரும்பாலான கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்



முதன்மைச் சங்கங்களாகச் செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்கின்றன.

தற்போது தமிழ்நாட்டில் 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 2020–21–ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.2,129.59 கோடி அளவிற்கு புரள் வணிகம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2021–22–ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் புரள் வணிகம் ரூ.2,089.69 கோடி ஆகும்.

## 5.1 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

### (i) வேளாண் விளைப்பொருள் விற்பனை

விவசாய உறுப்பினர்களின் நலனுக்காக ஏல விற்பனைக் களங்கள், உலர்களங்கள், தானிய ஈட்டுக்கடன் ஆகிய வசதிகளை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தியுள்ளன. விளைப்பொருட்களை வெளிப்படையான முறையில் ஆதாய விலைக்கு விற்பனை செய்ய வழிவகை செய்கின்றன. மேலும், வேளாண் விளைப்பொருட்களின் மதிப்புக் கூட்டுதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற பணிகளையும் செய்து வருகின்றன.

2020-21-ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.773.31 கோடி அளவிற்கு வேளாண் விளைப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. 2021-22-ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) ரூ.826.91 கோடி மதிப்பிலான வேளாண் விளைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



### (ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன்தாரர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, வேளாண் விளைப்பொருட்களை விற்பனை செய்ய உதவி புரிந்து வருகின்றன. இதன் மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன் தொகை வசூலாவதோடு, வேளாண் உறுப்பினர்களின் விளைப்பொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்யவும் உதவி புரிந்து வருகின்றன.

2020-21-ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.4.03 கோடி அளவிற்கு கடன் வசூலித்துள்ளது. 2021-22-ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.3.24 கோடி அளவிற்கு கடன் வசூலித்துள்ளது.

**(iii) விற்பனையுடன் இணைந்த நுகர்வோர் கூட்டுறவு**

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விவசாய உறுப்பினர்களின் விளை பொருட்களைக் கொள்முதல் செய்து, பதப்படுத்தி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு விற்பனைச் செய்திட கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடன் இணைந்து செயல்படுகின்றன. இதன் மூலம் பண்டகசாலைகள் தரமான பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்வதோடு விவசாயிகளுக்கு ஆதாய விலையும் கிடைக்கிறது.

2020-21-ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்து ரூ.90.08 கோடி மதிப்பிலான மதிப்புக்கூட்டப்பட்ட வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்துள்ளன. 2021-22-ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) ரூ.73.61 கோடி மதிப்பிலான



மதிப்புக்கூட்டப்பட்ட வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**(iv) தானிய ஈட்டுக் கடன் வழங்குதல்**

அறுவடைக் காலங்களில் விவசாயிகளின் அவசரத் தேவைகளுக்காக வேளாண் விளைப் பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதை தவிர்க்கவும், வேளாண் விளைப் பொருட்களை சேமித்து வைத்து சாதகமான சந்தை சூழ்நிலையின் போது ஆதாய விலைக்கு விற்பனை செய்ய ஏதுவாகவும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கி வருகின்றன. 2021-22-ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) ரூ.67.03 கோடி மதிப்பிலான தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளன.

**(v) தரமான விதைகள் விற்பனை**

விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்கச் செய்யும் வகையில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறுதானியங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் தரமான விதைகளைக் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு விற்பனைச் செய்து வருகின்றன. 2020-21 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.5.02 கோடி அளவிற்கு தரமான விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2021-22-ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) ரூ.4.28 கோடி அளவிற்கு தரமான விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**(vi) உர விநியோகம்**

வேளாண் உற்பத்தியை அதிகரித்திடும் பொருட்டு, வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு உரங்களை விநியோகம் செய்கின்றன. உரங்கள் பயிர்க்கடனில் ஒரு பகுதியாகவும் மற்றும் ரொக்கத்திற்கும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.



தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்களுக்கான மொத்த உர விற்பனை முகவர்களாக செயல்பட்டு வருகின்றன. உரங்களின் மொத்த சந்தை தேவையில் கூட்டுறவுகள் 20 சதவீதத்தை பூர்த்தி செய்கின்றன. இதனை மேலும் அதிகரித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2021-22-ஆம் ஆண்டில், உலகம் முழுவதும் யூரியா உரத்தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையிலும், 1,20,634 மெ.டன் அளவிலான யூரியா விவசாயிகளுக்கு குறுவை மற்றும் சம்பா பருவங்களில் வழங்கப்பட்டன.

அங்கக மற்றும் இயற்கை விவசாயத்தினை ஊக்குவிக்கும்பொருட்டு கூட்டுறவுகள் மூலம் உயிரி உரங்கள் மற்றும் வேப்பம்பிண்ணாக்கு உற்பத்தியை துவக்க புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிடமிருந்து

800 மெ.டன் மண்புழு தொழுஉரங்களை கொள்முதல் செய்யவும், சென்னை பெருநகர மாநகராட்சியுடன் இணைந்து 250 மெ.டன் திடக்கழிவு உரம் கொள்முதல் செய்தும் தமிழ்நாடு முழுவதுமுள்ள விவசாயிகளுக்கு ஆதாய விலையில் (கிலோ ஒன்றிற்கு ரூ.6/-) விநியோகம் செய்து வருகிறது.

2020-21-ஆம் ஆண்டில் 4,86,830 மெ.டன் அளவில் ரூ.709.20 கோடி மதிப்பிற்கு உர விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 2021-22-ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 4,85,908 மெ.டன் அளவில் ரூ.864.04 கோடி மதிப்பிற்கு உர விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**(vii) பதனிடுதல் மற்றும் வேளாண் விளைப் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல்**

பெரும்பாலான வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பருத்தி ஜின்னிங் அலகுகள், பருப்பு பதனிடும் அலகுகள், மிளகாய்



அரைக்கும் அலகுகள், எண்ணெய் பிழியும் அலகுகள் (கடலை, எள் மற்றும் தேங்காய்), அரிசி ஆலைகள், சிறு தானியங்கள், மஞ்சள், மசாலா, குங்குமம், மிளகு பதனிடும் அலகுகள், காபி வறுக்கும் அலகுகள், மரச்செக்கு எண்ணெய் அலகுகள் ஆகிய பதனிடும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் வேளாண் விளைப்பொருட்களுக்கு மதிப்பு கூட்டப்பட்டு அதிக விலை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரிசி, பருப்பு, மஞ்சள் தூள், மசாலா பொருட்கள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவை தயாரிக்கப்பட்டு பல்வேறு வணிகப் பெயர்களில் சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் சந்தைப்படுத்தப்படுகிறது.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "அர்த்தநாரீஸ்வரா" என்ற வணிக பெயரில் சமையல் எண்ணெய், அரிசி, பருப்பு மற்றும் மசாலா பொருட்களை சந்தைப்படுத்துகிறது. சேலம்

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "அமிர்தம்" என்ற வர்த்தக பெயரிலும், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "பசுமை" என்ற வர்த்தக பெயரிலும், சைதாப்பேட்டை கூட்டுறவு விற்பனைச் சங்கம் "மருதம்" என்ற வர்த்தக பெயரில் விற்பனை செய்து வருகின்றன.

ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "மங்களம்" என்ற வணிகப் பெயரில் மஞ்சள் மற்றும் மசாலாப் பொருட்களை வணிகப்படுத்தி சந்தைப்படுத்துகிறது. இச்சங்கம் மஞ்சள், மசாலா பொருட்கள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றை மின் வணிக இணையதளமான www.mangalammasala.com மூலம் ஆன்லைன் விற்பனை மற்றும் கைபேசி செயலி மூலமும் விற்பனை செய்கின்றன. மதிப்பு கூட்டப்பட்ட கூட்டுறவு பொருட்களை விற்பனை செய்வதற்கு



mangalammasala.com என்ற இணையதளமே கூட்டுறவுகளில் முதல் முழுமையான இணையதளமாகும். இச்சங்கம் மசாலா பொருட்களை நாடு முழுவதும் விற்பனை செய்திட இப்கோ நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது.

2020–21–ஆம் ஆண்டில் இப்பொருள்களின் புரள் வணிகம் ரூ.17.09 கோடி ஆகும். 2021–22–ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) இப்பொருள்களின் புரள் வணிகம் ரூ.34.06 கோடி ஆகும்.

**(viii) ஊரக பகுதிகளில் கிடங்கு பயன்பாட்டினை விரிவாக்கம் செய்தல்.**

அறுவடைக் காலங்களில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதிலிருந்து தவிர்த்திடவும், சேமிப்பு இழப்புகளின்றி பாதுகாத்திடவும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள்

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் 5,10,600 மெ.டன் கொள்ளளவு கொண்ட 3,879 கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. சேமிப்பு கிடங்கு உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் மேலும் 165 கிடங்குகளின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில், 156 நிறைவு பெற்றுள்ளது.

2020–2021–ஆம் ஆண்டில், 7,575 விவசாயிகள் இச்சேமிப்பு கிடங்குகளில் தானியங்களை ஈடாக வைத்து ரூ.239.39 கோடி தானிய ஈட்டுக் கடன் பெற்றுள்ளனர். மேலும், 6,512 விவசாயிகள் ரூ.216.31 கோடி மதிப்புள்ள விவசாய விளை பொருட்களை வாடகைக்கு வைத்து பயனடைந்துள்ளனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் கொள்முதல் செய்யும் நெல்லை சேமித்து வைக்க இக்கிடங்குகளை பயன்படுத்தி வருகிறது. 2021–22–ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) 5,010 விவசாயிகள் ரூ.147.26 கோடி தானிய ஈட்டுக் கடன் பெற்றுள்ளனர். மேலும்,



6,776 விவசாயிகள் ரூ.130.89 கோடி வாடகைக்கு வைத்து பயனடைந்துள்ளனர்.

மேலும் சிறு மற்றும் குறு விவசாயிகள், 7% என்ற குறைந்த வட்டி விகிதத்தில் தானிய ஈட்டுக் கடன் பெறும் வகையில் நேர்மறை மதிப்புடைய கிடங்குகள் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை 1,327 கிடங்குகள் நேர்மறை மதிப்புள்ள கிடங்குகளாக கண்டறியப்பட்டு, இதில் 1,027 கிடங்குகள் கிடங்கு மேம்பாடு ஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**(ix) நேரடி கொள்முதல் நிலையங்கள்**

கூட்டுறவுச் சங்கங்கள், பாசன பகுதி அல்லாத மாவட்டங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை நடத்துவதன் மூலம் விவசாயிகளின் நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கிடைப்பதை உறுதி செய்கிறது. குறுவை பருவத்தில், மூன்று

மாவட்டங்களில் 31 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு ரூ.4,084.35 இலட்சம் மதிப்பிலான 21,124.830 மெ.டன் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

சம்பா பருவத்தில் இதுவரை மதுரை மாவட்டத்தில், 31 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டது. 24.03.2022 வரை ரூ.5,804.81 இலட்சம் மதிப்பிலான 28,053.820 மெ.டன் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.



## இயல் – III

## நுகர்வோர் கூட்டுறவுகள்

நுகர்வோர் கூட்டுறவுகள், தரமான நுகர்வுப் பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதுடன், வெளிச்சந்தையில் உள்ள நுகர்வுப் பொருட்களின் விலை உயர்வைத் தடுத்து, அதன் மூலம் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும்இரு பெரும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றன.

நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மூன்றடுக்கு அமைப்பினை கொண்டுள்ளது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மாநில அளவிலும், 39 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மாவட்ட அளவிலும், 363 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் தொடக்க நிலையிலும் செயல்பட்டு வருகின்றன.

## 2. செயல்பாடுகள்

### 2.1 தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் (TNCCF)

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மாநிலத்தில் உள்ள அனைத்து நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) காகிதம் மற்றும் எழுதுபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்து, அவற்றை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளின் வணிகத்திற்காக விற்பனை செய்கின்றது. மேலும், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் இரண்டு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களை நடத்திவருகின்றன. 2020-21-ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால்



ரூ.4437.43 இலட்சம் அளவிற்கு மொத்த வியாபாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2021-22-ஆம் ஆண்டில் 31.03.2022 வரை தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் ரூ.5709.10 இலட்சம் அளவிற்கு மொத்த வியாபாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.2 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், மளிகைப் பொருட்கள், பருப்பு வகைகள், தானியங்கள் மற்றும் மசாலாப் பொருட்களை, உற்பத்தி மையங்கள், உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கூட்டு கொள்முதல் குழு மூலம் நேரடியாக, குறைவான விலையில் மொத்தமாக கொள்முதல் செய்து, வெளிச்சந்தையுடன் ஒப்பிடும்போது நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றன.

மாநில முழுவதும் செயல்பட்டு வரும் 39 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளால் 17 பல்பொருள் அங்காடிகள், 48 சிறு பல்பொருள் அங்காடிகள், 61 சில்லறை விற்பனை நிலையங்கள், 55 சுயசேவைப் பிரிவுகள், 129 கூட்டுறவு மருந்தகங்கள், 37 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், 27 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், 31 சமையல் எரிவாயு வழங்கும் அலகுகள் மற்றும் 82 மண்ணெண்ணெய் வழங்கும் மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் 3377 நியாய விலைக் கடைகளையும் நடத்துகின்றன. இதன் மூலம் பொது விநியோகத் திட்டத்தினைச் சிறப்பான முறையில் செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் முதன்மைச் சங்கங்களாக



செயல்பட்டு, அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிடங்குகளில் இருந்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்கின்றன.

## 2.3 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள்

நுகர்வோர் கூட்டுறவுகளில், தொடக்க நிலையில் தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்படுகின்றன. இவை நியாய விலைக்கடைகள், சில்லறை விற்பனை அங்காடிகள், பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள் போன்றவற்றை நடத்தி வருகின்றன. மாவு அரவை அலகுகள், மசாலாப் பொருட்கள் அரவை அலகுகள் மற்றும் சிகைக்காய் அரவை அலகுகள் ஆகியவற்றையும் பல்வகை வணிக நடவடிக்கையின் ஒரு பகுதியாக செய்து வருகின்றன.

தமிழ்நாட்டில், 55 கூட்டுறவு மருந்தகங்கள், 18 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 4 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை 363 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் நடத்தி வருகின்றன

## 3. நுகர்வோர் கூட்டுறவுகளின் விற்பனை செயல்பாடுகள்

(ரூ.இலட்சத்தில்)

| வ. எ ண் | கூட் டுறவு நிறுவனத்தின் வகை | கட்டுப்பாட்டுப் பொருட்கள் | | கட்டுப்பாடற்ற பொருட்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2020 –21 | 2021–22 (பிப்ரவரி – 22) | 2020–21 | 2021–22 (பிப்ரவரி –22) | 2020 – 21 | 2021 – 22 (பிப்ரவரி –22) |
| 1. | மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் | 611.88 | 783.71 | 1,014.40 | 955.99 | 1,626.28 | 1,739.70 |
| 2. | தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் | 109.97 | 145.28 | 277.96 | 263.21 | 387.93 | 408.49 |

## 4. புதிய கூட்டுறவு மருந்தகங்கள்

கூட்டுறவு மருந்தகங்களின் பயன்கள் மாநிலம் முழுவதும் உள்ள நுகர்வோரை சென்றடையும் வகையில், ஆண்டுக்கு 60 மருந்தகங்கள் என அடுத்த ஐந்து ஆண்டுகளில் 300 புதிய மருந்தகங்கள் திறக்கப்படும் என்று மாண்புமிகு கூட்டுறவு துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டது. மற்ற



அனைத்து தனியார் மருந்தகங்களுக்கிடையில் தனித்து நிற்கும் விதமாக, ஒரே மாதிரியான வண்ணம், தனித்துவமான சின்னம் மற்றும் பெயர் பலகைகளுடனான 70 புதிய கூட்டுறவு மருத்தகங்கள் 16.12.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த **70** புதிய கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் **31.03.2022** வரை ரூ.235.21 இலட்சம் மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. செயல்பாட்டில் உள்ள 305 கூட்டுறவு மருந்தகங்கள் மற்றும் 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள், தரமான மருந்துகளை, குறைவான விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும், இம்மருந்தகங்களில் **20%** வரை தள்ளுபடி வழங்கி மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன. கூட்டுறவு

நிறுவனங்களால் நடத்தப்படும் 375 மருந்தகங்கள் மூலம் 2021–22–ஆம் ஆண்டில் 31.03.2022 வரை ரூ.163.30 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 4.1 மைய மருந்து கொள்முதல்

முன்னதாக கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் மருந்தகங்களுக்கு, தனித்து செயல்படும் வகையில் மருந்து நிறுவனங்களின் உள்ளூர் விநியோகஸ்தர்களிடமிருந்து மருந்துப்பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வந்தன. இதன் விளைவாக கூட்டுறவு நிறுவனங்களால் வழங்கப்பட்ட மருந்துப் பொருட்களின் தேவைப்பட்டியல் தனித்தனியே வழங்கப்பட்டதால் அவை குறைவான அளவிலேயே இருந்தன. இதனால் மருந்து நிறுவனங்களிடமிருந்து அதிகமான விளிம்பினை பெற இயலவில்லை.

இவ்விடர்பாட்டினை களையும் விதமாக, கூட்டுறவு மருந்தகங்களுக்கு மருந்து



கொள்முதலுக்கென மைய மருந்து கொள்முதல் தொடங்கப்பட்டது. அனைத்து கூட்டுறவு மருந்தகங்களின் மருந்துப் பொருட்களின் தேவைப்பட்டியலைப் பெற்று, அவற்றை ஒருங்கிணைத்து, இடைத்தரகர்களின்றி, மருந்து நிறுவனங்களிடமிருந்து நேரடியாக மைய மருந்து கொள்முதல் செய்வதன் மூலம், கூட்டுறவு நிறுவனங்கள்அதிக விளிம்பு பெறுவதற்கு வழிவகுக்கும்.

மைய மருந்து கொள்முதல், சோதனை அடிப்படையில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளன. பின்னர் மாநிலம் முழுவதும் படிப்படியாக அமல்படுத்தப்படும். தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மைய மருந்து கொள்முதலுக்கு தலைமை நிறுவனமாக செயல்படும். இது அனைத்து கூட்டுறவு மருந்தகங்களிலிருந்தும்

தேவைப்பட்டியலைப் பெற்று, ஒருங்கிணைத்து, அதனடிப்படையில் மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு தேவைபட்டியல் அளிக்கும். கடந்த 3 மாத விற்பனையின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் தானே தேவைப்பட்டியலை தயாரித்திடும் ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் காலாவதியான மருந்துகளின் விவரங்களை அறிய இந்த மென்பொருள் உதவுகிறது. மேலும், கூட்டுறவு மருந்தகங்களில் அதிகமாக விற்பனையாகும் மருந்துகளை கொள்முதல் செய்யவும், குறைவாக / விற்பனையாகாத மருந்துகளின் கொள்முதலை தவிர்க்கவும், காலாவதியான மருந்துகளின் சரக்கிருப்பைக் குறைக்கவும் உதவுகிறது.

மைய மருந்து கொள்முதலைச் செயல்படுத்துவதன் மூலம், 375 கூட்டுறவு மருந்தகங்களிலும் பிராண்டட் மருந்துகள் மற்றும்



பிராண்டட் ஜெனரிக் மருந்துகள் பொது மக்களுக்கு விற்பனைக்கு கிடைப்பது உறுதி செய்யப்படும்.

## 5. சந்தை குறுக்கீடு நடவடிக்கை

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த, தேவையின் அடிப்படையில், நுகர்வோர் கூட்டுறவுகள் **சந்தை குறுக்கீடு நடவடிக்கையில் ஈடுபடுகின்றன**. நவம்பர் 2021–இல் பெய்த வடகிழக்கு பருவமழை மற்றும் வெள்ளத்தின் போது, தக்காளி உள்ளிட்ட காய்கறிகளின் விலை வானளாவ உயர்ந்தது. பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் (நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் உட்பட) மூலம் 150 மெட்ரிக் டன் தக்காளி மற்றும் 1,100 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.4.00 கோடி மதிப்பிற்கு நுகர்வோருக்கு விற்கப்பட்டு, அதன் மூலம் வெளிச்சந்தையில் ஒரு கிலோவுக்கு ரூ.120–150–ஆக

இருந்த தக்காளியின் விற்பனை விலை வெகுவாகக் குறைந்து ஒரு கிலோவுக்கு ரூ.40–50–ஆக கட்டுப்படுத்தப்பட்டது.



## இயல் – IV

## சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள்

சில சிறப்பு வகை கூட்டுறவுச் சங்கங்களான பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொழிலாளர் ஒப்பந்த கூட்டுறவு சங்கங்கள் சிறப்பு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் குறிப்பிட்ட மக்களுக்கு சிறப்பு சேவைகளை வழங்கி வருகின்றன.

### (i) பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

மலைவாழ் பழங்குடியினர் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த தமிழகத்தில் 25 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் பழங்குடியினர் மற்றும் பழங்குடியினரல்லாத மக்களுக்கு பயிர்க்கடன் வழங்குதல், நுகர்வோர் கடன் வழங்குதல், வேளாண் இடுபொருள் விநியோகம், வேளாண் விளைப் பொருள்

விற்பனை, சிறுவனப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் விற்பனை, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் அரசு ஆண்டுதோறும் ரூ.90.00 இலட்சம் பங்குத் தொகை மூலதனம், மத்தியக் காலக் கடன் மற்றும் சுய உதவிக் குழு கடன் மானியமாக அளித்து வருகின்றது.

இச்சங்கங்கள் பழங்குடியின உறுப்பினர்களுக்கு வேளாண் இடுபொருட்கள், சாகுபடிக்கென குறுகிய கால பயிர்க்கடன்களையும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்காக மத்தியக் கால கடன்களையும் வழங்கி பழங்குடியின உறுப்பினர்களின் வேளாண் பொருட்களை சந்தைப்படுத்திடவும் உதவி வருகின்றன. 2021–22–ஆம் ஆண்டில் (31.03.2022 வரை) பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்



ரூ.168.87 கோடி அளவிற்கு புரள் வணிகம் செய்துள்ளன.

"சிறு வனப்பொருட்களை குறைந்தபட்ச ஆதரவு விலை மூலம் கொள்முதல் செய்து விற்பனை அதிகரித்திடவும், மதிப்பினை கூட்டவும் அரசு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் மலைவாழ் மக்களால் வனங்களிலிருந்து சேகரிக்கப்படும் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. சிறு வனப்பொருட்களை குறைந்த பட்ச ஆதரவு விலை மூலம் கொள்முதல் செய்திட 20 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.305.30 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### (ii) **தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்**

தற்போது தமிழ்நாட்டில் **56** தொழிலாளர் ஒப்பந்த கூட்டுறவு சங்கங்கள் 19,960 உறுப்பினர்களை

கொண்டு செயல்பட்டு வருகின்றன. ஒப்பந்தப்பணிகள் மூலம் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கிட இச்சங்கங்கள் உதவி புரிகின்றன.

**(iii) துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் லிட்., (TUCAS)**

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (TUCAS) கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூரில் 1955–ஆம் ஆண்டு முதல் சிறப்பு வகை தொடக்க விவசாய கூட்டுறவுச் சங்கமாக செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் வேளாண் இடுபொருள்கள், பூச்சிகொல்லி மருந்து, வேப்பம்பிண்ணாக்கு, நுண்ணூட்டச் சத்து விதைகள், வேளாண் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனை மேற்கொண்டு வருகிறது. மேலும், 'அசோகா மார்க்' என்ற பெயரில் கலப்பு உரங்களை தயாரித்து தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது.



விவசாய உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன், அடைமானக்கடன், நகைக்கடன், தனிநபர் கடன், தொழில் முனைவோர் கடன், மகளிர் சிறு வணிகக்கடன், ஆதிதிராவிடர் நலக்கடன் போன்ற கடன்களை வழங்கி வருகிறது. துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் வேளாண் உபகரணங்களான விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான், பேட்டரி மூலம் இயங்கும் தெளிப்பான், மண்ணை சமன் செய்யும் கருவி, மண்வெட்டி, ஏர் உழும் கருவி, களை எடுக்கும் கருவி மற்றும் நீரில் கரையும் பூச்சிக்கொல்லி மருந்துகள், களைக்கொல்லிகள் ஆகியவற்றை வழங்குவதுடன் சான்றளிக்கப்பட்ட நெல்விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகித்து வருகிறது. 2020–21–ஆம் ஆண்டில், ரூ.78.54 இலட்சம் மதிப்பிலான விதைகள், ரூ.181.60 இலட்சம் மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் ரூ.25.23 இலட்சம் மதிப்பிலான வேளாண்

உபகரணங்கள் விற்பனை செய்துள்ளது. 2021–22–ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) ரூ.110.55 இலட்சம் மதிப்பிலான விதைகள், ரூ.156.89 இலட்சம் மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் ரூ.47.15 இலட்சம் மதிப்பிலான வேளாண் உபகரணங்கள் விற்பனை செய்துள்ளது.

**(iv) கூட்டுறவு அச்சகங்கள்**

கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுத் தேவையை பூர்த்தி செய்திட தற்போது 26 கூட்டுறவு அச்சகங்களில் 11797 உறுப்பினர்களுடனும் ரூ.2.70 கோடி பங்குத் தொகையுடனும் மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு அச்சகங்கள் கூட்டுறவு அச்சகம் இல்லாத அருகிலுள்ள மாவட்டங்களின் அச்சுத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றன. மேலும், அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தனியாரிடமிருந்து அச்சுப் பணி ஆணைகளைப் பெற்று வருகின்றன. இக்கூட்டுறவு



அச்சகங்கள் 2020–21–ஆம் ஆண்டில், ரூ.57.12 கோடி அளவிற்கு புரள் வணிகம் எய்தியுள்ளது. 2021 – 22–ஆம் ஆண்டில் (28.02.2022 வரை) கூட்டுறவு அச்சகங்களின் புரள் வணிகம் ரூ.46.62 கோடியாக உள்ளது.

பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கூட்டுறவு அச்சகங்களில் கணினி எழுதுபொருள் மற்றும் அச்சிடப்பட்ட படிவங்கள் தயாரிக்கும் வசதியினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# இயல் – V

## பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே அனைவருக்குமான பொது பொதுவிநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் உள்ள மொத்த நியாய விலைக் கடைகளில் 95.4% நியாயவிலைக் கடைகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்தப்படுவதால், பொது விநியோக திட்டத்தினை திறம்பட செயல்படுத்திட கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. 28.02.2022 அன்றுள்ளபடி தமிழகத்தில் 23,814 முழு நேர மற்றும் 9,360 பகுதி நேர நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் 98 முதன்மைச் சங்கங்கள் மற்றும் 336 தன் நகர்வு சங்கங்கள் மூலம் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள



நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யப்படுகின்றன.

### 2. கூட்டுறவு நியாய விலைக் கடைகள்

**2.1** மாநிலத்தில் 33,174 நியாய விலைக் கடைகள் 1,99,72,797 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கி வருகின்றன. பொது விநியோகத் திட்டப் பொருட்கள், சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்கள் மற்றும் ஊட்டி டீ, அரசு உப்பு போன்ற கட்டுப்பாடற்ற பொருட்களும் நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 2021–2022–ஆம் ஆண்டு வேளாண்மை துறையின் நிதிநிலை அறிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து மாநிலத்தில் பனைமரம் வளர்ப்போரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், அக்டோபர் 2021 முதல் நியாய விலைக் கடைகள் மூலம் தரமான பனை வெல்லமும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சிறப்புப்

பொது விநியோகத் திட்டப் பொருட்களான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவையும் நியாய விலைக் கடைகளில். அரசு வழங்கும் மானிய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**2.2** குடும்ப அட்டைதாரர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் மண்ணெண்ணெய் வழங்குவதற்காக 248 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 3. நகரும் நியாய விலைக் கடைகள்

மலைப்பகுதிகள் மற்றும் தொலைதூர கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில், நகரும் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது மாநிலம் முழுவதும் பழங்குடியினர் வசிக்கும் மலை மற்றும் தொலைதூரப் பகுதிகளில் மொத்தம் 50 நகரும் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு கடினமான



மலைப்பகுதிகளில் பயணிக்கும் இன்னல்களைப் போக்கும் வகையில் பெரும்பாலான இடங்களில், மட்டக் குதிரைகள் மற்றும் கோவேறு கழுதைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் பொதி சுமையாக சுமக்கப்பட்டு நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. தவிர, மாநிலத்தின் நகர மற்றும் கிராமப்புறங்களில் நியாய விலைக் கடைகளில் இருந்து வெகு தொலைவில் அல்லது இயற்கை தடைகளால் தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புகளில் உள்ள அட்டைதாரர்களுக்கு சேவை செய்ய பல நகரும் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

## 4. நியாய விலைக் கடைகளின் செயல்பாட்டைக் கண்காணித்தல்

பொது விநியோகத் திட்டத்தினை நிகழ்நேர அடிப்படையில் எளிதாக கண்காணிக்கும் வகையில் பொது விநியோகத் திட்டத்தில், கணினிமயமாக்கல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் விற்பனை முனையக் கருவி (POS) உள்ளது, இது, சரக்குகளை அனுப்புவது முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்வது வரை, விநியோகச் சங்கிலியில் உள்ள ஒவ்வொரு பரிவர்த்தனையும் நிகழ்நேர அடிப்படையில் இணைய அடிப்படையிலான வலைப்பக்கம் மூலம் கண்காணிக்கப்படும். கிட்டத்தட்ட 97% பரிவர்த்தனைகள் கைவிரல் ரேகைப் பதிவு முறையில் மேற்கொள்ளப்படுகின்றன, இதனால் போலியாக பட்டிகள் தயாரிப்பதும் களவு செய்தலும் கட்டுப்படுத்தப்படுகின்றன.



## 5. இதர பொருட்களின் விற்பனை விவரம்

### 5.1 ஊட்டி தேயிலை விற்பனை விவரம்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயிகள் தேயிலை விலை ஏற்ற இறக்கதால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உற்பத்தி செய்யும் தேயிலையானது **"இண்ட்கோசர்வ்"** நிறுவனம் INDCOSERVE (The Tamilnadu Small Tea Growers' Industrial Cooperative Tea Factories' Federation Ltd.,) மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, **ஊட்டி டீ** என்ற வியாபார பெயரில் (Brand Name) நியாய விலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு விற்கப்படுகிறது. இது சிறு தேயிலை விவசாயிகளுக்கு விலையை கட்டுப்படுத்தியும் நிரந்தர வருமானத்தை ஈட்டவும் உதவுகிறது. 2021–22–ஆம் ஆண்டில் 1,842 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 5.2 அரசு உப்பு விற்பனை விவரம்

அயோடின் கலந்த உப்பு தமிழ்நாடு உப்பு நிறுவனத்தில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்தப்படும் நியாய விலைக்கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. நியாய விலைக் கடைகள் மூலம் 2000–01 முதல் 2021–22 (28.02.2022) வரை 4,89,726 மெட்ரிக் டன் உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது பொது மக்களிடையே அயோடின் பற்றாக் குறையினால் ஏற்படும் குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது.

## 5.3 பனைவெல்லம் விற்பனை விவரம்

2021–22–ஆம் ஆண்டு வேளாண் துறையின் நிதிநிலை அறிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின் விளைவாக, காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் கொள்முதல் செய்யப்படும் பனை வெல்லத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மூலம் அக்டோபர் 2021 முதல் பிப்ரவரி 2022 வரை ரூ.35.05 லட்சம் மதிப்புள்ள தரமான பனை வெல்லம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 6. காலிக்கோணிகளை எம்.எஸ்.டி.சி. நிறுவனம் வழியாக மின்னணு ஏலம் (e–auction) மூலம் விற்பனை செய்தல்

காலி சணல் கோணிகளின் விவரங்கள் MSTC (Metal Scrap Trading Corporation Ltd.,) இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு MSTC–யின் மின்–ஏல தளம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. இது வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதோடு, காலிக்கோணிகளுக்கு சிறந்த விலையும் பெற உதவுகிறது. 28.02.2022 வரை மொத்தம் 27,73,98,551 காலிக் கோணிகள் MSTC–யின்

மின்னணு–ஏல தளம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 7. புதிய நியாய விலைக் கடைகளைத் திறத்தல்

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக மே 2021 முதல் பிப்ரவரி 2022 வரை 14 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 107 பகுதி நேர நியாய விலைக் கடைகள் உட்பட மொத்தம் 121 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

### 8. நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

மே 2021 முதல் பிப்ரவரி 2022 வரை, 19 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 17 பகுதி நேர நியாய விலைக் கடைகள் ஆக மொத்தம் 36 நியாய விலைக்கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

புதிய நியாய விலைக் கடைகள் கட்டுவதற்கு, மாநிலத்தின் திராவிட கலாச்சார, பாரம்பரியத்தை



பிரதிபலிக்கும் வண்ணம் பின்வருமாறு, இரண்டு வகை கட்டட வடிவமைப்புகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

1. 500–க்கும் குறைவான குடும்ப அட்டைகளுடன் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு 440 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடங்கள் 7.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவும்,
2. 500–க்கும் கூடுதலான குடும்ப அட்டைகளுடன் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு 550 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடங்கள் 10.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மொத்தமாக 6970 நியாயவிலைக் கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் இல்லை. இக்கடைகளுக்கு படிப்படியாக சொந்த கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மே 2021 முதல் மார்ச் 2022 வரை, 120 பொது விநியோகத் திட்ட கடைகளுக்கு

பல்வேறு திட்டங்களின் மூலம் சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 9. நியாய விலைக்கடை விற்பனையாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி

2021–2022–ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, நேர்மறை பணிக்கலாச்சாரத்தை வளர்ப்பதற்காகவும் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்காகவும், நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் 20,364 விற்பனையாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது.

### 10. நியாயவிலைக் கடைகளை நடத்தும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அரசு மானியம்

கூட்டுறவுச் சங்கங்கள் இலாப நோக்கின்றி சேவை மனப்பான்மையுடன் நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மேலும், விலையில்லாமல்



அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச மானிய விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன. நியாயவிலைக் கடைகளை நடத்துவதில் நட்டம் ஏதும் ஏற்பட்டால் அதனை ஈடு செய்யும் வகையில் அரசால் மானியம் வழங்கப்படுகிறது. 2021–22–ஆம் ஆண்டில் அரசால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு, பொதுவிநியோகத் திட்ட மானியமாக ரூ.600.81 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

# இயல் – VI

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 37 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சியினை வழங்கி வருகின்றன. உறுப்பினர் கல்வி நிகழ்ச்சிகள், பொருட்காட்சிகள், கருத்தரங்குகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டி நடத்துதல் நடத்துவதன் மூலம் விளம்பரம் மற்றும் பிரச்சார பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், இலாபத்தில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் நிகர லாபத்தில் 3% கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும், 2%



கூட்டுறவு கல்வி நிதிக்கும் வசூல் செய்கிறது. இந்த நிதி, கூட்டுறவு பற்றிய ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவு பற்றிய செய்திகளை பொது மக்களுக்கு எடுத்துச் செல்ல பயன்படுத்தப்படுகிறது.

### 2. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள்

தற்போது மாநிலத்தில் 22 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவு மேலாண்மை பயிற்சியினை மாணவர்களுக்கு முழு நேரமாகவும் மற்றும் கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கு அஞ்சல் வழியிலும் நடத்தி வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் பயனடையும் வகையில் குறுகியகால பயிற்சியினையும் அளித்து வருகின்றன. 2021–22–ஆம் ஆண்டில், 22 பயிற்சி

நிலையங்களில் 9615 மாணவர்கள் முழுநேர பட்டயப் பயிற்சியில் சேர்ந்துள்ளனர்.

### 3. தொழிற் கல்வி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில் தலா ஒரு கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிறுவனத்தினை நடத்தி வருகிறது. இக்கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்களில், கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி (COPA), தையற்கலை, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, மின் பழுதுபார்த்தல் மற்றும் சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது. 2021–22–ஆம் ஆண்டில் மேற்கண்ட இரு தொழிற்பயிற்சி நிலையங்களில் 227 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியையும் நடத்தி வருகிறது. இக்கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியில், இயந்திரப்



பொறியியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் ஆகிய பட்டயப் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. 2021–22–ஆம் ஆண்டில், மேற்காணும் பட்டயப் பயிற்சிகளில் 173 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 4. கூட்டுறவு மேலாண்மை தொடர்பான உயர் பட்டயப் பயிற்சி மற்றும் குறுகியகாலப் பயிற்சி

தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழுமத்தால் (புதுடெல்லி), இரண்டு கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் ஒன்று சென்னையிலும் மற்றொன்று மதுரையிலும் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நிதி உதவி அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையங்களில் கூட்டுறவு மேலாண்மை உயர் பட்டயப்பயிற்சி மற்றும் வணிக மேலாண்மையியல் முதுகலை பட்டப்படிப்பும் (MBA) நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையங்கள், கூட்டுறவுத் துறை மற்றும்

கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கு குறுகியகாலப் பயிற்சிகளையும் நடத்தி வருகிறது.

2021–22–ஆம் ஆண்டில், சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தால் நடத்தப்பட்ட 40 குறுகிய காலப் பயிற்சிகளில் 1202 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மதுரை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தாலும், 32 குறுகிய காலப் பயிற்சிகள் நடத்தப்பட்டன, இதில் 1115 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 5. பல்கலைக் கழகங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி

கூட்டுறவில் ஆராய்ச்சி மேற்கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெரியார் பல்கலைக் கழகம் மற்றும் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகம் ஆகிய



6 பல்கலைகழகங்களில் ஒவ்வொன்றிலும் ரூ.5.00 இலட்சத்தினை நிதிய மூலதனமாக வைத்துள்ளது. இந்நிதி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு, இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் கூட்டுறவு மற்றும் அதன் தொடர்புடைய இனங்களில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 25 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூ.21.25 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 6. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின் பயன்பாடு

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி பெயரில் ஒரு கணக்கினை பராமரித்து வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் நிகர இலாபத்தில் 3% தொகையினை இந்நிதிக்கு வழங்குகின்றன. இந்நிதி, கூட்டுறவு ஆராய்ச்சிக்கான மானியமாகவும்

மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காக வட்டியில்லாக் கடனாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

### 7. கூட்டுறவுக் கல்வி நிதியின் பயன்பாடு

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கூட்டுறவு கல்வி நிதி பெயரில் ஒரு கணக்கினை பராமரித்து வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் நிகர இலாபத்தில் 2% தொகையினை இந்நிதிக்கு வழங்குகின்றன. இந்நிதி கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி, கூட்டுறவுகளை பற்றிய விளம்பரம் மற்றும் பிரச்சாரம் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிதி, கூட்டுறவு கல்வி நிதிக் குழுவின் ஒப்புதலுடன் விடுவிக்கப்படுகிறது.

இந்நிதி, கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்தல், மாவட்டங்களில் உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும்



அகில இந்திய கூட்டுறவு வார விழாக்கள் கொண்டாடுதல் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

## இயல்– VII

# ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் (ICDP)

1. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் கூட்டுறவுகளின் பொருளாதார ஆற்றல்நிலையை வலுப்படுத்துதல் ஆகும். கூட்டுறவுகளின் உள்கட்டமைப்புகளின் வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் உறுப்பினர்களுக்கு உரிய சேவைகளை அளிக்கவும், 'விளிம்புத் தொகை உதவி' அளிக்கப்படுவதன் மூலம் வணிகத்தினைப் பெருக்குவதற்கும், கூட்டுறவு அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் நலனை மேம்படுத்திடவும் இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டமானது அனைத்து வகைக் கூட்டுறவுகளுக்கும் பயன் நல்குவதாகும்.

2. தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக ஆலோசனையின்படி, மாநில அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இத்திட்டமானது ஐந்து ஆண்டுகளுக்கு



செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

3. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி உதவி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தமிழக அரசுக்குக் கடனாக வழங்கப்பட்டு, தமிழக அரசிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனாகவும், பங்குத்தொகையாகவும் வழங்கப்படுகிறது. மனித வள மேம்பாடு மற்றும் நிர்வாகச் செலவுகள் மானியமாக அளிக்கப்படுகின்றன. விவசாய விற்பனைத் திட்டத்திற்கும், பதப்படுத்துதல் போன்ற 'துணைத் திட்டங்களுக்கும்' திட்டத் தொகையில் 25% இந்திய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படுகிறது.

4. கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளான கிடங்குகள் கட்டுவதற்கும், கிடங்குடன் கூடிய அலுவலகம் கட்டுவதற்கும், நவீன வங்கி அமைப்பு , மின்னணு அளவை இயந்திரம், கணினி

மயமாக்குதல், டிராக்டர் மற்றும் உபகரணங்கள், இயந்திரங்கள், மருந்து தெளிக்கும் இயந்திரங்கள், இரும்புப் பெட்டகம், பணப் பெட்டி, தளவாடச் சாமான்கள், பாதுகாப்புப் பெட்டகம், ரூபாய் எண்ணும் இயந்திரம், கள்ள நோட்டு கண்டறியும் கருவி, கனரக இயந்திரங்கள் போன்றவற்றை வாங்குவதற்கும் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

5. கைத்தறித் துறையில் 'ஒருங்கிணைந்த கைத்தறி தொகுப்பினை' உருவாக்குவதற்கும், அலுவலகக் கட்டடம், கிடங்குடன் கூடிய அலுவலகம் ஆகியவற்றைக் கட்டுவதற்கும், கணினி, மரத்தளவாடங்கள், தறி இயந்திரம் ஆகியவற்றை வாங்குவதற்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும், வணிகத்தினைப் பெருக்குவதற்கு விளிம்புத் தொகை உதவியும் வழங்கப்படுகிறது.

6. பால் வளத்துறையின் சார்பாக, பால் தொகுப்பு நிலையங்களுக்குத் தேவையான சாதனங்கள், பால் குவளைகள், அதற்கான மூடிகள், பால் வாங்கும் போது அதன் தர ஆய்வு செய்வதற்கான பால் தர



சோதனைக் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்கும், பால் குளிரூட்டு மையங்களில் பாலினைச் சேமித்து வைப்பதற்கான சாதனங்களை வாங்குவதற்கும், நிதியுதவி வழங்குவதுடன் இவ்வியாபாரத்தை பெருக்குவதற்கு விளிம்புத் தொகையும் வழங்கப்படுகிறது.

7. மீன்வளத்துறையில் இத்திட்டத்தின் கீழ் நைலான் வலைகள் வாங்கவும், அலுமினியப் பாத்திரங்கள் வாங்கவும், விற்பனை நிலையங்கள் அமைக்கவும் நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும், வணிகத்தினைப் பெருக்குவதற்கு விளிம்புத் தொகை உதவியும் வழங்கப்படுகிறது.

8. இத்திட்டம் 1989–ஆம் ஆண்டு முதல் 2017 வரை கீழ்க்காணும் இருபத்து எட்டு மாவட்டங்களில் ரூ.462.97 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு முடிவடைந்துள்ளது.

(ரூ. இலட்சங்களில்)

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | வருடம் | தொகை |
|---|---|---|---|
| 1 | விருதுநகர் | 1989–1995 | 840.86 |
| 2,3 | கடலூர் – விழுப்புரம் | 1992–1997 | 1,445.08 |
| 4,5 | கோயம்புத்தூர் – திருப்பூர் | 1995–2001 | 1,080.99 |
| 6,7 | தருமபுரி – கிருஷ்ணகிரி | 1995–2001 | 1,160.25 |
| 8 | திருவண்ணாமலை | 1996–2001 | 816.58 |
| 9 | காஞ்சிபுரம் | 1998–2005 | 1,103.88 |
| 10 | இராமநாதபுரம் | 2000–2004 | 664.04 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 2002–2008 | 1,216.97 |
| 12 | தஞ்சாவூர் | 2002–2008 | 1,091.59 |
| 13,14 | பெரம்பலூர் – அரியலூர் | 2002–2008 | 926.62 |
| 15 | திருவாரூர் | 2002–2008 | 1,222.44 |
| 16 | தேனி | 2005–2011 | 978.17 |
| 17 | தூத்துக்குடி | 2005–2011 | 942.08 |
| 18 | சேலம் | 2009–2013 | 2,651.58 |
| 19 | ஈரோடு | 2009–2013 | 3,534.32 |
| 20 | மதுரை | 2009–2013 | 2,376.45 |
| 21 | புதுக்கோட்டை | 2009–2013 | 1,437.56 |
| 22 | திண்டுக்கல் | 2010–2013 | 3,078.35 |
| 23 | சிவகங்கை | 2010–2014 | 2,738.69 |
| 24 | திருநெல்வேலி | 2010–2014 | 4,201.07 |
| 25 | கரூர் | 2011–2016 | 2,541.02 |
| 26 | வேலூர் | 2011–2016 | 3,100.13 |
| 27 | நாகப்பட்டிணம் | 2011–2016 | 4,147.08 |
| 28 | நீலகிரி | 2012–2017 | 2,974.43 |
| | | கூடுதல் | 46,297.19 |



9. தற்போது ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டமானது கீழ்க்கண்ட நான்கு மாவட்டங்களில் காலநீட்டிப்புடன் நடைபெற்று வருகிறது. மொத்த திட்ட தொகையான ரூ.355.78 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(ரூ. கோடியில்)

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | வருடம் | தொகை |
|---|---|---|---|
| 1 | நாமக்கல் | 2016–2021 | 75.55 |
| 2 | திருவள்ளூர் | 2016–2021 | 49.68 |
| 3 | கன்னியாகுமரி | 2016–2021 | 58.37 |
| 4 | சென்னை | 2017–2022 | 172.18 |

10. விருதுநகர், இராமநாதபுரம், திருப்பூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 9 மாவட்டங்களில் இரண்டாம் கட்டமாக ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அமைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. விரிவான திட்ட அறிக்கையானது தேசிய கூட்டுறவு

வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**11.** உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், ஏழைகள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் வாழும் மக்களின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கு தேவையான உதவிகளை வழங்குவதிலும் பொது விநியோகத் திட்டம் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது. இவ்வாறு இலக்கு எண்.1. வறுமையின்மை மற்றும் இலக்கு எண்.3. நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு ஆகிய இரண்டு நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய ஏதுவாக, தமிழ்நாட்டின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் செயல்படுகிறது.



# இயல் – VIII

## கூட்டுறவுத் தேர்தல்

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவதற்கென்று தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது. அதன் பொருட்டு 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்தம்) சட்டம் 2012–இன்படி 33–A என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டது. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தேர்தல் ஆணையம் 08.02.2013 முதல் செயல்படத் துவங்கியது.

அரசியலமைப்பு 97–வது திருத்தச் சட்டம் 2011–இன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுவில் ஒரு பட்டியல் வகுப்பு உறுப்பினரும் மற்றும் இரண்டு

பெண் உறுப்பினர்கள் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெண்களுக்கான அதிகாரமளிக்கும் பொருட்டும், சமூக நீதியினை உறுதி செய்திடும் பொருட்டும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில், 2013–ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின்படி, தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழுவில் 18% பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கும் மற்றும் 30% பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2013–ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள 22,552 சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு, 2,04,889 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.




2013–ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களின் 5 ஆண்டு பதவிக்காலம் முடிவுற இருந்த தருவாயில் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 பிற செயற்பதிவாளர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிற **18,805** கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2018ல் நான்கு கட்டங்களில் தேர்தல் நடத்திட அறிவிப்பு வழங்கப்பட்டது. அவற்றுள் **18,244** சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு, 1,88,400 நிர்வாகக்குழுவினர் தேர்வு செய்யப்பட்டு, பதவியேற்றுள்ளனர்.

## முடிவுரை

கூட்டுறவு இயக்கமானது நாட்டு மக்களின் அன்றாட வாழ்வின் ஓர் அங்கமாக விளங்குவதுடன், நாட்டு மக்களின் நலனுக்காக, குறிப்பாக நலிவுற்ற பிரிவினரின் நல்வாழ்விற்கு முக்கிய பங்காற்றி வருகிறது. இனிவருங்காலங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கத்தை மேலும் வலுப்படுத்திட கூட்டுறவுத் துறை கடினமாக பாடுபடும்.

**இ.பெரியசாமி**
**கூட்டுறவுத் துறை அமைச்சர்**



டிபாசிட்டு கட்ட விண்ணப்பம்.

சின்ன காஞ்சிபுரம் கோவாபரேடிவ் அர்பன் பாங்கி (லிட்.) நெ. 381
செயலாளர் அவர்களுக்கு,

ஐயா,

மேல்கண்ட பாங்கியில் கரெண்ட் டிபாசிட் கட்ட மெம்பராக வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த பாங்கியின் தற்கால நிபந்தனைகளுக்கும் இனி ஏற்படும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு நடந்து கொள்ளுகிறேன்.

1. என் பெயர் C.N. அண்ணாதுரை
2. தகப்பன் / ~~கணவன்~~ பெயர் நடராஜன்.
3. ஜாதி –
4. மதம் –
5. வயது 55
6. தொழில்
7. விலாசம் 54. வரகுவாசல் தெரு.
8. ரெகரிங் டிபாசிட்டானல் மாதம் மாதம் கட்ட ஒத்துக்கொண்ட சந்தா தொகையும் மாதங்களும் —
9. பிக்செட் டிபாசிட்டானல் ______ வருஷத்துக்கு டிபாசிட்டு செய்ய ஒத்துக் கொண்ட தொகையும், கேட்கும் வட்டி வீதமும், வட்டியைப் பெற்றுக்கொள்ளும் தவணை விவரமும் —
10. எனக்குப்பின் என் பாத்யதையை அடையும் வார்சு பெயர், இருப்பிடம் மகன் C.N.A. இளங்கோவன்.

சாக்ஷிகள்:

1. பெயர்
விலாசம்

2. பெயர்
விலாசம்

C.N. அண்ணாதுரை
விண்ணப்பதார்.

தேதி 1965

விண்ணப்பதார் மாதிரி கையெழுத்து.
C.N. அண்ணாதுரை
C.N. அண்ணாதுரை

பேறைமுனை அச்சகம், காஞ்சிபுரம்.

சின்ன காஞ்சிபுரம் நகர கூட்டுறவு வங்கியில் முன்னாள் முதலமைச்சர் திரு. C.N.அண்ணாதுரை அவர்கள் 1965ல் நடப்பு கணக்கு வைத்திருந்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 2.10.2021 அன்று மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கே.நாட்டாபட்டி கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க அலுவலகத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டபோது, பயனாளிகளுக்கு பயிர்க் கடனுக்கான காசோலைகளை வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் தமிழகத்தின் 36 மாவட்டங்களில் 70 புதிய கூட்டுறவு மருந்தகங்களை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.9.2021 அன்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லவன் சாலையில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடையை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.



மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீவல்சரகு ஊராட்சிக்குட்பட்ட கதநாயகிபுரத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தற்காலிகமாக செயல்படவுள்ள ஜெயினி ஹெல்த் அண்ட் எஜூகேஷனல் சாரிடபிள் டிரஸ்ட் சார்ந்த கல்லூரி வளாகத்தில் உள்ள கட்டடங்களை 23.12.2021 அன்று பார்வையிட்டு, அங்குள்ள வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.




திண்டுக்கல் மாவட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் திண்டுக்கல் மேற்கு வட்டம், கன்னிவாடி முதல்நிலை பேரூராட்சி சமுதாயக் கூடத்தில் 25.1.2022 அன்று கூட்டுறவுத் துறை மூலம் கால்நடை வளர்ப்புக்கான வட்டியில்லா நடைமுறை மூலதனக்கடன் உதவிகளை 358 பயனாளிகளுக்கு வழங்கினார்.



மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் சென்னை சைதாப்பேட்டையில் 19.3.2022 அன்று நடைபெற்ற விழாவில் நகைக்கடன் தள்ளுபடி பெற்ற 165 பயனாளிகளுக்கு நகைகளை வழங்கினார்கள்.




மதுரை மாவட்டம் செக்காணூரணியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கூட்டுறவு மருந்தகம்



புதியதாக கட்டப்படவுள்ள பொதுவிநியோகத் திட்ட நியாயவிலைக்கடையின் மாதிரி வடிவமைப்பு



மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் 28.7.2021 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தின் விதை பதப்படுத்தும் இயந்திரத்தினை ஆய்வு மேற்கொண்டார். உடன் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப., உள்ளார்.



மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் 28.7.2021 அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சமையல் எண்ணெய்களின் தயாரிப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., உள்ளனர்.



டி.யூ.சி.எஸ். பண்ணைப் பசுமை நுகர்வோர் கடையில் மலிவு விலையில் தக்காளி விற்பனை